வகுப்பு : 4 பயிற்சித்தாள் - 3 தேதி : 26.7.22

பாடம் : தமிழ் 4. முளைப்பாரி ஒப்படைப்புத் தேதி : 31.7.22

IV தமிழ்

## முளைப்பாரி –பாடல்

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

1. தையலர் என்பதன் பொருள்___________
   அ) தேவர்கள் ஆ) மக்கள் இ) ஆண்கள் ஈ) பெண்கள்
2) சோளத்தட்டு பிரித்து எழுதும் முறை ___________
   அ) சோளம் + தட்டு ஆ) சோளத் + தட்டு
   இ) சோள + தட்டு ஈ) சோளத்து + தட்டு
3) ஒசந்த என்ற சொல்லின் எழுத்து வழக்குச் சொல் ___________
   அ) உகந்த ஆ) ஒசரமான இ) உயர்ந்த ஈ) ஒயர்ந்த
4) ஒரே ஓசையில் முடியும் சொற்களைக் கண்டுபிடி________
   அ) நாளையிலே- கிழமையிலே ஆ) சிறுபயிறு- மணிப்பயறு
   இ) அள்ளிவந்து- தெறந்தது ஈ) முளைப்பயிறு- காப்புக்கட்டி
5) நவதானியங்கள் என்பது___________ வகை
   அ) 5 ஆ) 8 இ) 9 ஈ) 7
6) முளைப்பாரிப் பாடல் என்பது, ஒரு ___________
   அ) தேசப் பாடல் ஆ) நாட்டுப்புறப்பாடல்
   இ) திரைப்படப் பாடல் ஈ) வழிபாட்டுப் பாடல்
7) ஆடு+ எரு - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது______________
   அ) ஆடுஎரு ஆ) ஆட்எரு
   இ) ஆட்டெரு ஈ) ஆட்டுஎரு
8) பொருந்தாதை வட்டமிடுக.
   அ) பட்டு- பாட்டு ஆ) கடை – காடை
   இ) தடை- தாடை ஈ) செவி- சாவி
9) நவதானியங்களுள் ஒன்று ___________
   அ) கோதுமை ஆ) கேழ்வரகு இ) கம்பு ஈ) சோளம்
10) சி--- பய— இரண்டு இடங்களிலும் விடுபட்ட ஒரே எழுத்தைக் கண்டுபிடி
   அ) ரு ஆ) று இ) ல் ஈ) ள்

## II. பத்தியைப் படித்து விடையளி:

### இயற்கை நமது நண்பன்.

அகிலன் மரத்தடியில் சோர்வாக அமர்ந்திருந்தான். அதை பார்த்ததும் மரம் அவனிடம், அகிலன்...! அகிலன்...! எதற்காக இப்படி சோர்வாக இருக்கிறாய்? என்று கேட்டது.எனக்கு தான் நண்பர்கள் யாருமே இல்லையே என்று வருத்தத்துடன் கூறினான். நண்பர்கள் என்றால் யார்? எனக்கு உதவி செய்பவர்கள், பாதுகாப்பவர்கள்,என்னுடன் விளையாடுபவர்கள். சரி... காலையில் என்ன சாப்பிட்டாய்? இட்லி. இட்லிக்கான அரிசியும் உளுந்தும் எப்படி வந்தது? விளை நிலங்கள் மூலம், அப்படியானால் விளைநிலம் உன் நண்பன் தானே! ஆமாம். பகலிலும், இரவிலும் ஒளி தருவது எது? சூரியனும், சந்திரனும். இவ்விருவரும் உன் நண்பர்கள் கிடையாதா? ஆமாம்! ஆமாம்! ஆனால்... இவர்கள் என்னுடன் விளையாட மாட்டார்களே..! பட்டம் கொண்டுவா... காற்று நண்பனுடன் விளையாடு. இவர்கள் தான் இனிமேல் உன் நண்பர்கள். இவ்வளவு நேரம் என் நிழலில் பேசிக் கொண்டு இருக்கிறாயே!நானும் உனது....... நிச்சயமாக நீயும் என் நண்பன் தான்.

1. அகிலன் எங்கு சோர்வாக அமர்ந்து இருந்தான்?

2. அகிலனின் நண்பர்களாக மரம் யாரை கூறியது?

3. எந்த நண்பனுடன் பட்டம் விளையாடுமாறு மரம் கூறியது?

4. நிழல் தந்த நண்பன் யார்?

5. நண்பர்கள் என்றால் யார்?

6. இந்த கட்டுரை கூறும் கருத்து என்ன?